## வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

# இரண்டாம் தவணைப்பரீட்சை - 2017

**தரம் - 6** | **புவியியல்** | **நேரம் : 2 மணித்தியாலம்**

சுட்டெண் : | புள்ளி

**பகுதி - ஐ**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பிரதேச நிர்வாகப் படிமுறையில் மிகப் பெரியது எது?
    1) கிராம உத்தியோகத்தர் பிரிவு 2) மாவட்டப்பிரிவு
    3) பிரதேசசெயலாளர் பிரிவு 4) மாகாணப்பிரிவு

02. வட மாகாணத்தில் உள்ளடங்காத மாவட்டம் எது?
    1) திருகோணமலை 2) மன்னார் 3) வவுனியா 4) முல்லைத்தீவு

03. பின்வருவனவற்றுள் குறைவான மாவட்ட எல்லைகளைக் கொண்டுள்ள மாவட்டம் எது?
    1) இரத்தினபுரி 2) யாழ்ப்பாணம் 3) மொனராகலை 4) அநுராதபுரம்

04. பாடசாலையொன்றின் பெயரில் ஆரம்பத்தில் காட்டப்படுவது எது?
    1) மாகாணம் 2) மாவட்டம் 3) பிரதேசப்பிரிவு 4) நகரம்

05. புனையா வரைபடத்தில் காட்டப்படும் முக்கிய திசை எது?
    1) கிழக்கு 2) மேற்கு 3) வடக்கு 4) தெற்கு

06. மில்லிமீற்றர் அலகில் அளவிடப்படும் வானிலை மூலகம் எது?
    1) வெப்பநிலை 2) மழைவீழ்ச்சி 3) காற்றின்வேகம் 4) காற்றின் திசை

07. வானிலை மூலகங்களில் மிகவும் பிரதானமானது எது?
    1) வெப்பநிலை 2) மழைவீழ்ச்சி 3) காற்று 4) மூடுபனி

08. இலங்கையில் வளிமண்டலவியல் திணைக்கள தலைமைக்காரியாலயம் அமைந்துள்ள இடம் எது?
    1) அகலவத்தை 2) அம்பேவல 3) பௌத்தலோகமாவத்தை 4) நுணுவில

09. குளிரான நாடுகளில் இருந்து எமது நாட்டிற்கு இடம்பெயரும் பறவை அல்லாதது?
    1) வெள்ளைப் பிடவைக்கள்ளி 2) காவியுடைக்கள்ளி
    3) காகம் 4) சிட்டுக்குருவி

10. மரங்களின் விதை பரவுவதற்கு உதவும் உயிரினம் எது?
    1) செண்பகம் 2) காகம் 3) வெட்டுக்கிளி 4) வெளவால்

11. வெசாக் விழாவை அனுஷ்டிக்கும் மதப்பிரிவினர் யார்?
    1) இந்துக்கள் 2) பௌத்தர் 3) இஸ்லாமியர் 4) கத்தோலிக்கர்



kalvi.lk

12. புகையிலை, வெங்காய விவசாய உற்பத்திகள் இலங்கையில் எப்பகுதியில் பிரதானமாக உற்பத்தி செய்யப்படுகின்றது?

1) வடபகுதி 2) கரையோரப்பகுதி 3) மலையகப்பகுதி 4) தென்பகுதி

13. இலங்கையின் பிரம்பு உற்பத்திக் கைத்தொழிலுக்குப் பிரசித்தி பெற்ற இடம் எது?

1) மொரட்டுவ 2) தும்பறை 3) ரடாவடுன்ன 4) பிலிமத்தலாவை

14. இலங்கையில் அம்பலாங்கொட பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற கைத்தொழில் எது?

1) முகமூடி 2) பித்தளைப்பொருட்கள் 3) பாய்கள் 4) மரத்தளபாடங்கள்

15. இலங்கையில் இடம்பெறும் சிறிய அளவிலான குடிசைக் கைத்தொழில் அல்லாதது?

1) தும்பு உற்பத்தி 2) அரிசிமாசார்ந்த உற்பத்தி
3) பெருந்தோட்ட உற்பத்தி 4) இனிப்புபண்ட உற்பத்தி

16. இலங்கையில் அரசினால் வழங்கப்படும் இலவச சேவைகளில் ஒன்று.

1) தபால் 2) வங்கி 3) போக்குவரத்து 4) கல்வி

17. தாவரங்களின் முறையான வளர்ச்சிக்கு அவசியமானது எது?

1) ஒட்சிசன் 2) நைதரசன் 3) காபனீரொட்சைட்டு 4) ஐதரசன்

18. ஆதிகால மனிதன் தனது செயற்பாடுகளை செயற்படுத்துவதற்குப் பயன்படுத்திய சக்தி.

1) மனித சக்தி 2) விலங்கு சக்தி 3) எரிபொருள்சக்தி 4) மின்சாரசக்தி

19. மாகாண மாவட்ட எல்லைகளை குறிக்கப்பயன்படும் நிறம் யாது?

1) கறுப்பு 2) சிவப்பு 3) கபிலம் 4) மஞ்சள்

20. பின்வருவனவற்றுள் பண்பாட்டு அம்சம் யாது?

1) ஆறு 2) மலைகள் 3) காடுகள் 4) பயிர்கள்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடைதருக.**

01. 1) இரண்டாம் தவணையில் புவியியல் பாடத்தில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

2) கணிப்பீட்டிற்காக நீங்கள் தரவுகள் பெற்றுக்கொண்ட வழிகள் இரண்டு தருக.

3) கணிப்பீட்டின் போது நீங்கள் பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருட்கள் 2 தருக.


4) கணிப்பீட்டினால் நீங்கள் எதிர்நோக்கிய சவால்கள் 2 இனையும் அக் கணிப்பீட்டினால் நீங்கள் அடைந்த நன்மைகள் 2 இனையும் குறிப்பிடுக.

( 2 + 2 + 2 + 6 =12 புள்ளிகள்)



kalvi.lk

*02.* *கீழே தரப்பட்ட இலங்கைப்படத்தினைப் பயன்படுத்தி* A, B *பகுதிகளுக்கு விடை அளிக்குக.*




A) T, C, E, X, L, M *ஆகிய ஆங்கில எழுத்துக்கள் குறித்து நிற்கும் மாவட்டங்களைக் குறிப்பிடுக.*

(6 x 1 = 6 *புள்ளிகள்)*

B) *பின்வருவன குறித்து நிற்கும் மாவட்டங்களுக்குரிய ஆங்கில எழுத்துக்களை எழுதுக.*

i) *உமது பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்*

ii) *பரப்பளவில் கூடிய மாவட்டம்*

iii) *சனத்தொகை கூடிய மாவட்டம்*

iv) *இலங்கையின் இயற்கை துறைமுகமுள்ள மாவட்டம்*

v) *மரத்தளபாடத்திற்குப் பிரசித்தி பெற்ற பிரதேசம் உள்ள மாவட்டம்*

vi) *இலங்கையில் உயர் நிலத்திலுள்ள மாவட்டம்*

(6 x 1 = 6 *புள்ளிகள்)*



kalvi.lk

*03)* i) *உமது பாடசாலை அமைந்துள்ள கிராமசேவகர் பிரிவு, பிரதேசசெயலாளர் பிரிவு என்பனவற்றைக் குறிப்பிடுக.*

ii) *பாடசாலைச் சூழலில் அமைந்துள்ள பொது இடங்கள் நான்கு குறிப்பிடுக.*

iii) *உமது பாடசாலையின் பெயர் முகவரியுடன் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணப்பிரிவு என்பவற்றை அதே ஒழுங்கில் குறிப்பிடுக.*

*(2 + 4 + 6 =12 புள்ளிகள்)*

*04)* i) *வானிலை என்பதனால் கருதப்படுவது யாது?*

ii) *பின்வரும் வானிலை மூலகங்களை அளவிடும் கருவிகளைப் பெயரிடுக.*

a) *வெப்பநிலை*

b) *மழைவீழ்ச்சி*

c) *காற்றின்வேகம்*

d) *காற்றின் திசை*

iii) *அயற்சூழலில் நீர் அவதானித்த*

a) *பௌதிக அம்சங்கள் 3 தருக.*

b) *பண்பாட்டு அம்சங்கள் 3 தருக.*

*(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)*

Education கல்வி අධ්‍යාපන

*05)* i) *உயிர்ச்சூழலில் பல்வகைத்தன்மை கொண்ட தாவரங்கள் விலங்குகள் காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 2 தருக.*

ii) *தாவரங்களின் பயன்கள் 4 குறிப்பிடுக.*

iii) *இலங்கையில் வழங்கப்படுகின்ற சேவைகள் 6 குறிப்பிடுக.*

*(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)*

*06)* i) *மனிதனுக்கு நிலம் பயன்படும் வழிகள் 2 குறிப்பிடுக.*

ii) *நிலத்தின் முறையற்ற பயன்பாட்டினால் ஏற்படுகின்ற விளைவுகள் 4 தருக.*

iii) *"கழற்தொகுதியின் நிலைத்திருப்பிற்கு நீர் அவசியமானதாகும்".*

a) *நீர்ப்பற்றாக்குறையினால் ஏற்படும் பிரச்சினைகள் 3 குறிப்பிடுக.*

b) *நீரைப் பாதுகாக்கும் வழிமுறைகள் 3 குறிப்பிடுக.*

*(2 + 4 + 6 = 12 புள்ளிகள்)*



kalvi.lk


தரம் 01 - 10
3ம் தவணை
REVISION | PAPER DISCUSSION
ஆரம்பம் - 01.12.2024
மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.
JOIN NOW
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..
கட்டண விபரங்கள்
தமிழ் Medium
தரம் 01-02
2000/=
தரம் 03-05
2500/=
தரம் 06-10
3000/=
English Medium
தரம் 06-07
3500/=
Education
கல்வி
අධ්‍යාපන
KALVI.LK
WHATSAPP
075 287 1457